ஜெயம் நமதே!



BORN TO SUCCEED

Dr. Paul Yonggi Cho

தமிழாக்கம் J. சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

BORN TO SUCCEED
ஜெயம் நமதே!

Pastor PAUL YONGGI CHO

Published in India by
J. SAM JEBADURAI
50, Railway Station Road
Kodambakkam
Madras 600 024

First Edition Nov '87
Rs. 5/-

Copy Right
Pastor Paul Yonggi Cho

PRINTED AT
HOREB PRINTERS
59-A Kamdar Nagar II Street
Nungambakkam
MADRAS-600 034.

BORN TO SUCCEED

Pastor Paul Yonggi Cho

BORN TO SUCCEED

(III John 2)

Pastor Paul Yonggi Cho

All living creatures on earth are born with a God given instinct to carry on their lives successfully. Plants stretch their branches in the direction which can expose them to the most sun. Even trees on a cliff stretch their branches to reach the sunny side in order to flourish. Broad leaf trees in temperate zones also shed their leaves when fall comes in order to lighten the burden for absorbing moisture and nourishment from the earth so that they can survive the cold season successfully in winter time.

What about birds? They have never studied architectural engineering or learned from their parents how to build nests yet because of an inborn instinct, they can build nests with style and comfort. They symmetrically construct their nests, lay eggs and raise their young because of their instinct to preserve and maintain their species.

Seasonal birds have no general weather condition maps or radar system but every year they travel long distances from north to south and return in spring. These tiny migrants travel so accurately on an unmarked course that they reach the same city in the south each year. They fly in the right direction only by the instinct which God has given them.

I have also been amazed at the diligence of a squirrel. Born in the Spring, she gathers acorns fervently before the winter comes though she has never experienced a winter.

How can these things happen? What if God had not put this instinct to survive into all living creatures? They would definitely have perished long ago and the whole earth would have become an empty and uninteresting wilderness. All creatures on earth can survive and preserve their species because of the instinct to flourish, which was given by the Creator.

However, why is it that only man would rather think of failure first instead of success? He tends to deny his inborn drive to succeed while all the creatures succesefully live their lives. We can't help but lament over those who walk in failure, committing blunders as if they had never received the ability to prosper. They bite, tear and fight each other, and they are robbed, killed and destroyed by the devil despite the fact that God has already given them the ability to prosper as well.

1. THE GOD GIVEN SUCCESS INSTINCT

The Bible tells us in Genesis 1:26-28:

"And God said, Let make man in Our image, after Our likeness: and let them have dominion over the fish of the sea, and over the fowl of the air, and over the cattle, and over all the earth, and over every creeping thing that creepeth upon the earth. So God created man in His own image, and in the image God created He him; male and female created

He them. And God blessed them, and God said unto them, Be fruitful, and multiply, and replenish the earth, and subdue it: and have dominion over the fish of the sea, and over the fowl of the air, and every living thing that moveth upon the earth."

Beyond all comparison, God still gives the greatest power to survive and prosper to man.

a) The instinct to be fruitful and multiply.

God put the instinct into man to be fruitful and multiply so that he would multiply, and today's world population has increased to four billion people through only Adam and Eve. The population has been increasing so rapidly that even now the world has become worried about a population explosion. But to struggle in hunger and nakedness is not the will of God, for God did not create man to be fruitful and multiply on the earth and then go hungry.

b) The instinct to subdue the earth and to have dominion over all the creatures.

God gave man high level of intelligence so that he would know how to conquer the earth vehicles which the sea with ships, the sky with aircrafts and even the space with rockets for the purpose of progress and human happiness as he utilizes them. Man is born to be a conqueror from his birth.

c) The instinct to dream and fulfill the imagination into creative reality for the glory of God.

Also in the power of man's imagination lies dormant the instinct to prosper. In the plant and animal world, all the creatures are living successfully by mechanical repetition within the limited instinct God had put within them. However, God did not limit man like other creatures. In man's creative instinct, there is infinite potential of creativeness like God.

This fact has been proved in the Bible. In Noah's day, as the population grew rapidly, Noah's descendants in the land of Shinar tried to build a great city, with a temple-tower reaching to the skies in order to reach heaven and keep them from scattering all over the world. But when God came down to see the city and the tower they were making, He said, "Behold, the people is one, and they have all one language; and this they began to do: and now *nothing will be restrained from them,* which they have imagined to do" (Genesis 11:6).

Even God knew that there would be nothing that could stop man from doing, whatever he had once decided to do because of the great power of his creative imagination; therefore, He gave the people different languages so they could not understand each other. By being confused with many languages, they could not communicate each other. They had become unable to develop and use their powers of creative instinct in different languages and they finally scattered to every direction on the surface of the earth in groups which spoke in the same language.

In our body also, God put the instinct to be healthy. The white blood cells will kill all the disease germs which may come into our body, and the blood plasma will coagulate the flowing blood. Wounds will heal by the power of the natural treatment.

In many scriptures, we see that man was born to prosper in all things because God chose to make him a creasture of success. Since this is true, how come he has so many failures in his life? Why does he live each day with a fear of failure?

It because the devil planted many seeds of failure in man's heart from the day he fell in the Garden of Eden. That day, the devil came in into his heart scattering seeds of failure consciousness and he is still devising many ways to rob, kill or destroy him. If Adam and Eve had only refused to accept the seeds of failure which the devil brought to them, man would never have known failure today.

Since Adam and Eve's rebellion against God, however, man lives with not only the prosperity instinct but also a failure instinct. Those who have turned to Jesus Christ have experienced a cleansing from the fear of failure and have received inner healing. Those who refused Jesus Christ continue to live with a guilt and failure complex They struggle and labor with their own effort to manage their lives without Jesus Christ and so they are open targets of Satan. Of course, we can change this situation by first turning to Jesus Christ and confessing our sins. Then through the Word and praying in the Holy Spirit, we can find a new and successful life in

Christ. That is why the Lord says that we wil become the head not the tail. We will be at the top, never at the bottom, lending to many people but borrowing from none, and we may have life, and have it more abundantly. We may be prosperous in all things in our life and be healthy, just as ou soul prospers in the Lord.

2. THE IMPORTANT FACTORS WHICH DESTROY THE INSTINCT TO SUCCEED

It is not the norm for a man to fail instead of to succeed. We are God's highest creation, made in His image and empowered to rise above every obstacle, we can and must remove the hindering factors which constantly approach us.

I would like to share with you the essential elements which can bring about failures. What caused the devil to be able to plant the seed of failure into our heart thus beginning his work to rob, kill and destroy us?

a) When you give up your dreams of visions;

A life without vision will easily become a good target for the devil's attack. The Bible tells us in Proverbs 29:18, "Where there is no vision, the people perish:" To live aimlessly with no vision for one's life is the most essential factor of every failure.

Any person, home, group or nation will be destroyed if the people continually bite and devour each other saying, "Let us eat and drink, for tomorrow we die!" Instead of allowing your dream to die, have a clear vision

for the future with a fervent earnestness for your clear-cut-goals and your brilliant future will open widely before your eyes.

b) When you think it is impossible:

One of the factors which can destroy you little by little from within is the negative attitude with such statements as; "I cannot do," or "I am undone!" These ideas are seeds of impossibility thinking which the devil can sow in our hearts. Even God cannot help us if we keep saying, "I can't do this or that." Who can help the person who continually keeps saying, "I can't do." You may think a situation or problem is pretty difficult but I urge you in Jesus' name not to say, "It is impossible for me to do that." Negative thinking breeds hopelessness which develops into negative living.

c) When you are captured by an inferiority complex.

"I am a wretched sinner," "I am not well educated and do not have good background." "I don't come from an outstanding family." If you allow these kinds of ideas to dwell in your mind, the instinct God had planted into your heart for you to prosper will be crowed out by the negative talk and eventually you will not be able to accomplish those things. Just as too much heat destroys all the vitamin C in vegetables, your inferiority complex and frustration will destroy all the important factors which are supposed to lead you to a successful way of living.

d) When circumstances cause you to fear

The Bible never tells us, "Fear the circumstances," but it clearly encourages us to replenish the earth, and subdue it, and have dominion over... every living thing

that moveth upon the earth (Genesis 1:26-28). I was told by an American hunter who used to capture wild animals alive in Africa and sell them in America, "If you fear wild animals, they will be attracted to you but, if you don't fear them they will not be attracted to you even when you sleep in the deep jungle."

Fear always emits waves which braw the enemies toward our lives. When a wild cat is trying to catch a rabbit, an older rabbit will always leave her young in her hole and flee. You may think she is a merciless mother running away to save only her life, but by doing this she can actually save her young ones from the cat. The young are not old enough to fear a cat yet so they have no fear which would attract the cat; but the mother emits waves of fear which leads a cat to her place of hiding. We should remember the words of Job, "For the thing which I greatly feared is come upon me, and that which I was afraid of is come unto me" (Job 3:25).

The Bible says, "Fear hath torment," (I John 4:18). If you fear poverity, poverty will conquer you someday. If you fear sickness, diseases will invade you not only physically but also mentally. If you fear failure you will be overcome by failure. Take authority or dominion over each one of them and cast out your fear in the name of Jesus! He came to set you free!

e) When you fall into condemnation.

By continually condemning your own conduct and way of living you will cause yourself to be destroyed too. "I am a sinner so I am not qualified to live a happy life. I am unworthy of success." This kind of guilt feelings can bring about failure.

f) When you have hatred and anger in your heart.

Hatred and anger are destructive factors because they blind us to any pathway to success. The instinct to prosper always works in faith, hope and love. Those who are temperamental and are easily angered will find it hard to succeed.

3. HOW TO DEVELOP THE GOD-GIVEN INSTINCT TO SUCCEED

a) Receive God's salvation.

We must receive God's blessing by first believing in Jesus. The first step toward being successful is to surrender our hearts to Jesus and be born again. By being reconciled to God, the blessing and grace of the Lord will be poured into our lives. His death for us sinners was for the purpose of reconciling us back to Himself that He might lead us into His ''green pastures."

b) Discipline yourself to have positive attitudes in your heart.

The most positive power in our lives is faith, hope and love. The Bible says, "And now abideth faith, hope, charity, these three; but the grestest is charity " (I Corinthians 13:13). These three factors are the nature of God. Where there is faith, circumstances are conquered and fear disappears. Where there is hope. we will be constantly strengthened enough to overcome any and all difficulties. Where there is love, people will be full of a will to live and full of happiness any joy.

c) Don't stop praying (Be consistent in your prayer life).

We must ask the Lord to remove all the uneasiness, anxiety, fear and despair out of our hearts in prayer. We brush our teeth and wash our face a couple of times every day. We often take a shower or bath. We all do our housec leaning frequently. But too many people today do not cleanse their heart often. Unless we cleanse our hearts daily, our hearts will accumulate many sins, and sin hinders our prayers from being answered. Just as flies swarm over filthy places, the devil will cause destructive emotions to cling to our hearts. We can only cleanse our heart by the Blood of Jesus Christ through earnest daily prayer.

The Bible says, ''Come unto me, all ye that labour and are heavy laden, and I will give you rest." (Matthew 11:28). When you release the burdens of your heart to Jesus in prayer, He will take them all and cleanse you, and bring peace.

The Bible also says in Philippians 4:4, ''Rejoice in the Lord alway: When our hearts become full of gladness, joy and hope, the power of Christ will begin its operation in earnest, and you will notice success taking over in all you attempt. The Bible states, ''Be careful for nothing; but in everything by prayer and supplication with thanksgiving let your requests be made known unto God. And the peace of God, which passeth all understanding, shall keep your hearts and minds through Christ Jesus" (philippians 4:6,7).

In order for the instinct for successful living to be active, our hearts must also be overflowing with peace like a river. We can remove all the opposite factors of ''Peace" by prayer and supplication also.

d) Study God's Word deeply.

We must develop greater dreams, visions and faith by researching and studying the Word. Just like men must eat food to maintain normal health, so every Christian must feed on God's Word to maintain a healthy "inner, man," or "new man" in Christ Jesus. The Word of God is also the heavenly food that can reveal the supernatural world to us. By reading the Bible from Genesis to Revelation, we can have the supernatural dreams and visions which are beyond human imagination, and experience the supernatural power of God in our lives.

"Faith cometh by hearing, and hearing by the Word of God." When we are fed with the Word each day until we are full we can have greater faith, hope, and love; and we can march forward into our daily world more boldly with answers and brilliant plans to succeed in whatever we undertake. In addition, when we are filled with the Holy Spirit we are supported by Him and we can't help but prosper in all things.

Today, God does not want any of His children to fail, because He has never failed. Can you imagine a God of failure? Can you imagine a God of despair sitting in the midst of anxiety? The Bible tells us that our God is omnipresent, omnipotent and omniscient. God did not create anything to fail.

Man was created in the image and likeness of God. Do you think man born to fail? No! If there is any failure in man's living, it's all caused by his own will to choose to side with the devil voluntarily to listen to his words of failure. If we see failures happening in our everyday lives it is caused by our own choice to refuse to walk with God.

We are allowing ourselves to think on negative ideas. We are speaking them with our hearts. When we do this, we unconsciously jump into the pit and live with the devil.

Man does not fail automatically. He chooses to fail. He was born to succeed automatically because God sent His Only Begotton Son to save the world. He said, "Repent, for the kingdom of heaven is at hand." In the sight of God, the life of failure is an abnormal life. In the sight of God a life which resists the will of God is a life on its way to failure. I would urge you to hear God's word, and believe that you were really born to succeed. Think and speak these words:

I AM BORN TO SUCCEED.
I AM LIVING A SUCCESSFUL LIFE.
SUCCESS IS A NORMAL LIFE.
AND I WAS BORN TO PROSPER.

Do not fear or shrink, back, but go forward with faith in God's richness and prosperity!

ஜெயம் நமதே!

ஜெயம் நமதே! நாம் ஜெயங்கொள்ளப் பிறந்தவர்கள்!

வெற்றியாய் வாழுவதற்கான உள்ளுணர்வை தேவன் எல்லா உயிரினங்களுக்கும் இயற்கையாகவே அருளிச் செய்திருக்கிறார். இது எத்தனை விசேஷமானது!

எந்த இடத்தில் சூரிய ஒளி கிடைக்கிறதோ அந்த இடத்தை நோக்கி மரம் செடி கொடிகள் வளைந்து இயற்கையாகவே தங்கள் கிளைகளை அங்கே திருப்புகின்றன! மித வெப்பப் பிரதேசத்திலுள்ள தாவரங்கள், குளிர்காலத்தில் அழுகி விடாதபடி முன் எச்சரிக்கையாக தங்கள் இலைகளை உதிரச் செய்து விடுகின்றன! ஒவ்வொரு கால மாறுதலுக்கேற்ப செடி கொடிகள் தங்களில் இயற்கையாகவே மாறுதல்களைச் செய்து கொள்ளுகின்றன! எத்தனை அருமையான உள்ளுணர்வு!

பறவைகளை கவனித்துப் பாருங்கள்! அவைகளுக்குத்தான் எத்தனை ஞானம்! தங்கள் இனப் பறவைகள் கூட்டு கட்டுவதைப் போன்றே, தங்களுக்கு எந்த முன் பயிற்சியும் இல்லாமல், தங்கள் பெற்றோரிடமும் கூட இருந்து கற்றுக் கொள்ளாமல், தாங்களாகவே அழகாக சீரும் சிறப்புமாக கூடுகளைக் கட்டுகின்றன. குஞ்சுகளுக்கு வேண்டிய போதிய வசதிகளை முன்னாலேயே செய்தபின், முட்டையிட்டு, அடைகாத்து, குஞ்சுகளைப் பொறிக்கச் செய்து, வளர்த்து விடுகிறது! தங்கள் இனத்தைப் பாதுகாத்துப் பெருகச் செய்யும் குணாதிசயம் இயற்கையாகவே அவைகளின் உள்ளுணர்வில் அமைந்திருக்கின்றன!

பருவக்காலப் பறவைகளை கவனித்துப் பாருங்கள். கால மாறுதல்கள், பூகோள விதிகள், தேசங்களின் சூழ்நிலைகள் இவைகளை அறிய அவைகளுக்கு எந்த தேசப்படங்களோ, இன்னும் நவீன ராடார் போன்ற கருவிகளும் இல்லாதிருந்தும் கூட அவைகள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, பல ஆயிரம் மைல்கள் தொலைதூரம் பறந்து சென்று, அந்த தங்கி

தாபரித்து விட்டு மீண்டும் வசந்த காலத்தில் திரும்பி வருகின்றன! இந்தப் பறவைகளால், எந்த வரை படமும் எந்த வழிகாட்டியும், உதவியுமின்றி எப்படி ஒரு குறிப்பிட்ட பட்டணத்தை நோக்கி, சரியான காலத்தில் துல்லிபமாக சென்று சேர முடிகிறது என்பது ஒரு பெரிய அதிசயம்! இவைகள் அனைத்திற்கும் காரணம் என்ன? ஆண்டவர் அவைகளுக்களித்த உள்ளுணர்வாகிய பிறவிக்குணமே! அவைகள் அந்த உள்ளுணர்வைப் பின்பற்றுகிற படியால் ஒருபோதும் திசை தப்பிப் போவதில்லை!

அணிலின் முன் ஏற்பாடுகளைக்கண்டு நான் ஆச்சரியப்படுவதுண்டு. எங்கள் தேசத்திலுள்ள அணில்களெல்லாம் பனிக் காலம் வருவதற்கு முன்பே தங்களுக்கு வேண்டிய பழங்கள், கொட்டைகள், விதைகள் இன்னும் உணவு தானியங்களை யெல்லாம் தாங்கள் வசிக்கும் பொந்துகளில் சேர்த்து வைத்து விடும்.

நாங்கள் வாழ வேண்டும்; நாங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; நாங்கள் பலுகிப் பெருக வேண்டும் என்ற உள்ளுணர்வுகள் அவைகளின் நரம்புகளிலும் இரத்தத்திலும் இயற்கையாய் அமைந்திருக்கின்றன! ஒரு வேளை அந்த உள்ளுணர்வுகளை தேவன் அவைகளுக்குக் கொடுக்காமலிருந்தால், பல்லாண்டுகளுக்கு முன்பே சகல ஜீவராசிகளும் அழிந்து பூமி வெறிச்சோடிக் கிடந்திருக்கும்! எப்படியாவது வாழ வேண்டும்: எப்படியாவது மாறும் சூழ்நிலையால் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு ஜெயங் கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வே அவைகளைப் பாதுகாத்து அவற்றின் இனத்தை தழைக்கச் செய்திருக்கின்றன!

ஆனால் மனிதனை நோக்கிப் பாருங்கள்! சோதனை வரும்போது நிலை கலங்கி, தோல்வியைப் பற்றியே நினைத்து அழிகிறான். தான் ஜெயங்கொள்ளப்பிறந்தவன் என்ற எண்ணமில்லாமல் மிகவும் அதைரியப்பட்டுப் போய் விடுகிறான்! மற்ற எல்லா உயிரினங்களும், பிரச்சனைகளோடும் இயற்கையின் மாறுதல்களோடும் எதிர்த்து நின்று வாழ்ந்தே தீருவது

என்று முயற்சிக்கும்போது மனிதன் மட்டும் ஏன் உள்ளுணர்வின்படி செயலாற்றி ஜெயம் பெறுவதில்லை? மனிதனின் தோல்விக்குக் காரணம் என்ன?

துயரமாய், மனம் சோர்ந்து போயிருக்கிறவர்களைக் கண்டால் நாம் வேதனைப்படாமல் வேறு என்ன செய்வது? அவர்கள் ஜெயம் பெறுவதற்கான எல்லா வழிகளையும் கர்த்தர் ஏற்கனவே செய்து வைத்திருந்தும், ஜெயம் பெறுவதற்கான ஆற்றலைக் கொடுத்திருந்தும் கூட அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணுக தோல்வியில் உழன்று கொண்டிருக்கிருர்கள்! எவ்வளவோ மகிழ்ச்சியாக தங்கள் வாழ்க்கையை அவர்களால் அமைத்துக் கொள்ள முடியும். ஆனல் அவர்களோ ஒருவரை ஒருவர் பட்சித்து, சண்டையிட்டு, எரிச்சலும், கோபமுமாய் திரிகிருர்கள். சாத்தானும் அவர்களை ஏமாற்றி, வஞ்சித்து ஆத்துமாவைக் கொன்று போடுகிருன்! ஜெயம் பெற வல்லமையுள்ளவர்கள் இப்படி தோல்வியடைவது எவ்வளவு பரிதாபம்!

1. தேவன் அருளிய வெற்றி உணர்வு:-

ஆதியாகமம் முதலாம் அதிகாரம் 26 முதல் 28 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக! அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றுர். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

இன்றைக்கும், இப்பொழுதும் கூட நாம் வாழ்ந்து செழித்து ஜெயம் பெற தேவன் வல்லமையைக் கொடுக்கத் தான் செய்கிறார்! தேவன் கொடுக்கும் இந்த வல்லமை இணையற்றது! விசேஷமானது!

அ. பலுகிப் பெருக வேண்டும் என்னும் உள்ளுணர்வு:-

பலுகிப் பெருக வேண்டும் என்ற உள்ளுணர்வை தேவன் மனிதனுக்குக் கொடுத்ததால்தான், ஆதாம் ஏவாள் மூலமாக இன்று உலகத்தின் ஜனத்தொகை நானூறு கோடிக்கு மேலாகிவிட்டது. ஜனம் கட்டுக்கடங்காமல் பெருகி விட்டதே, இனி கொடிய பஞ்சம் வருமோ என்று கலங்கு மளவுக்கு மக்கள் பலுகிப் பெருகி விட்டார்கள்.

ஆனாலும் கூட பசி, பஞ்சம், பட்டினி என்பது தேவனு டைய சித்தமல்ல. பலுகிப் பெருகச் சொன்ன கர்த்தர், மனிதனை வறுமையில் வாட்டி சாகடிக்கவா செய்வார்? ஒரு போதும் அவர் அப்படிச் செய்யவே மாட்டார்.

ஆ, பூமியையும் எல்லா உயிரினங்களையும் ஆளுகை செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு:-

கர்த்தர் மனிதனுக்கு இயற்கையாகவே எல்லாவற்றை யும் ஆளுகை செய்யக் கூடிய விசேஷ அறிவையும் உள்ளுணர் வையும் கொடுத்திருக்கிறார். ஆகவே அவன் அநேக போக்குவரத்து இயந்திரங்களைச் செய்து உலகமெங்கும் பிரயாணஞ் செய்கிறான். கடலின் மேல் ஆளுகை செய்து கப்பலில் சமுத்திரங்களைக் கடக்கிறான். ஆகாயத்தி லும், விண்வெளிகளிலும் கூட அவனது அறிவினால் ஆளுகை செய்து மிகவேகமாகப் பறந்து செல்கிறான். தான் முன்னேற வேண்டும்; வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு தன் அறிவை பயன்படுத்து கிறான். ஆம், மனிதன் ஜெயம் பெறும்படி பிறந்தவன்! பிறப்பிலேயே ஜெயம் பெறும் உள்ளுணர்வைப் பெற்றவன்.

இ. திட்டமிட்டு செயலாற்றி, தன் கனவுகளை நனவாக்கும் உள்ளுணர்வு:-

தாவரங்களுக்கானாலும் சரி, அல்லது மிருக ஜீவன்களுக்கானாலும் சரி, அவைகளின் உள்ளுணர்வின் வல்லமை மிகக் குறுகியதே! அவை பரம்பரை பரம்பரையாக வழக்கத்தின் படி திரும்பத் திரும்ப வருவதேயாகும்! ஆனால் மனிதனின் உள்ளுணர்வோ, சிந்தனை சக்தியோ அப்படிப்பட்டதல்ல. கர்த்தர் மனிதனுடைய சிந்தனை சக்தியையும், செயலாற்றும் திறமையையும் மட்டுப்படுத்தவே இல்லை! மனிதனின் மனதில் உருவாக்கும் சக்தி அளவில்லாததாக இருக்கிறது. தான் தன் அறிவினால் முன்னேறும்படி அவன் எப்பொழுதும் திட்டம் தீட்டிக் கொண்டேயிருக்கிறான். கர்த்தர் கொடுத்த அறிவை பயன்படுத்திக் கொண்டேயிருக்கிறான்.

வேதத்தில் இதற்கு உதாரணம் உண்டு. நோவாவின் காலத்தில் ஜனத்தொகை பெருகியபோது, அவனது சந்ததியார் ஒன்று சேர்ந்து சிநெயார் என்ற தேசத்தில் ஒரு பெரிய பட்டணத்தைக் கட்டி எழுப்பினார்கள். ''நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள்" என்றார்கள்.

மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும், கோபுரத்தையும் பார்க்கிறதற்கு கர்த்தர் இறங்கினார். ''இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது என்று இருக்கிறார்கள்'' என்றார் (ஆதி 11:6).

மனுஷர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது என்பதைக் கர்த்தரே முன் அறிந்திருந்தார். எப்பொழுது மனிதன் ஒரு பெரிய காரியத்தைச் செய்ய நினைக்கிறானோ, திட்டமிடுகிறானோ அதை கர்த்தர் கொடுத்த மிகுந்த கற்பனைத்

திறனிலும், ஞானத்தினாலும் செய்து முடித்து விடுவான் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே, தேவன் அவர்கள் பாஷைகளைத் தாறுமாறாக்கி ஒருவரோடொருவர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடியாதபடி செய்தார். ஆகவே ஒரே மொழியில் ஒன்றாக ஒருமனப்பாடோடு இணைந்து செயலாற்ற அவர்களால் கூடாமற் போயிற்று. யார் யார் ஒரே மொழியைப் பேசினார்களோ, அவர்களெல்லாரும் ஒன்றாக இணைந்து சிறு சிறு கூட்டங்களாக உலகமெங்கும் சிதறிப் போனார்கள்.

ஆரோக்கியமாய் வாழ வேண்டும் என்ற உள்ளுணர்வை கர்த்தர் இயற்கையாகவே நம் சரீரத்தில் ஏற்படுத்தியுள்ளார். நோய்க்கிருமிகளை எதிர்க்கும் வல்லமை நமது இரத்தத்திற்கு உண்டு. நம் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் எல்லா வியாதிகளுடனும் யுத்தம் செய்து அவைகளை கொன்று விடுகின்றன. சரீரத்தை விட்டு விரட்டுகின்றன. இரத்தப்போக்கு நீண்ட நேரமிருந்தால் உடலுக்கு ஆபத்து என்பதை உடலிலுள்ள பிளாஸ்மா அறிந்து உடனே இரத்தத்தை உறையப்பண்ணி, இரத்தப்போக்கை நிறுத்தி விடுகின்றன. அநேக காயங்கள், எந்த மருத்துவ ஒத்தாசையுமின்றி தானாகவே குணமாகி விடுகின்றன.

மனிதன் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கவும், ஜெயங்கொண்டவனாகத் திகழவுமே கர்த்தர் விரும்புகிறார் என்பதை பல வேத வசனங்கள் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன. இது உண்மையானால் ஏன் மனிதனின் வாழ்வில் ஏராளமான தோல்விகள் அவனை கலங்கச் செய்கிறது? ஏன் தோல்வியைப் பற்றிய பயத்தோடு அவன் நடுங்குகிறான்?

இதன் காரணம் என்னவென்றால், சாத்தான் தோல்வியின் விதைகளை மனிதனின் உள்ளத்தில் விதைத்து விட்டது தான்! ஏதேன் தோட்டத்தில் மனிதன் பாவத்தில் விழுந்து போன நாள் முதற்கொண்டு, விடாமல் தோல்வியின் பயங்களை உருவாக்கியது மட்டுமல்லாமல், அவனைக் கெடுக்கவும், கொல்லவும், அழிக்கவுமே முயன்று வருகிறான்.

அன்று சாத்தான் கொண்டு வந்த தோல்வியின் விதை களை ஆதாமும் ஏவாளும் ஏற்றுக் கொள்ள மறுத்திருப்பார்க ளேயாகில் இன்று மனுக்குலத்திற்கு எந்தத் தோல்வியும் ஏற் படாதிருந்திருக்கும்!

ஆதாமும் ஏவாளும் தேவ கட்டளையை மீறி பாவஞ் செய்த நாளிலிருந்து மனிதன் இரண்டு வகை உணர்வு களோடு வாழ வேண்டியதாயிற்று. ஒன்று தேவன் கொடுத்த வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுமென்ற உணர்வு, மற்றது சாத்தான் கொடுத்த தோல்வி, பயம், கவலை உணர்வு!

இயேசு கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையில் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டவர்கள். தங்கள் குற்ற உணர் வுகள், தோல்வியின் சிந்தைகளெல்லாம் கழுவப்பட்ட புதிய அனுபவத்தைப் பெறுகிறார்கள். சாத்தானின் பயத்திலிருந்து விடுதலையாகி ஆரோக்கியமடைகிறார்கள்.

ஆனால் இயேசுவை வேண்டாமென்று மறுத்து விடுகிற வர்களோ தொடர்ந்து தோல்வியிலும், குற்ற உணர்விலும் தாழ்வு மனப்பான்மையிலும் தவிக்கிறார்கள். தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த முயற்சித்து, முடியாமல், முடிவில் சாத்தானின் கண்ணிகளுக்குள் சிக்கிக் கொள்கிறார்கள்.

நாம் இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி நம்முடைய பாவங் களையெல்லாம் அறிக்கையிட்டு விட்டுவிடும்போது கர்த்தர் பயத்தையும் தோல்வியையும் நம்மை விட்டு நீக்கிப் போடு கிறார். வேத வாக்கியங்களின் வல்லமையினாலும், பரிசுத்த ஆவியினால் நிரம்பி ஜெபிப்பதினாலும் நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு ஜெயமுள்ள வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம். அதனால் தான் தேவன்,

''நீங்கள் வாலாகாமல் தலையாவீர்கள்"

''நீங்கள் கீழாகாமல் மேலாவீர்கள்''

''நீங்கள் அனேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பீர்கள். நீங்களோ கடன் வாங்காதிருப்பீர்கள்''

''ஜீவனைப் பெற்று பரிபூரண ஜீவனோடு வாழுவீர்கள்''

''உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பீர்கள்'' என்று வாக்குப் பண்ணி இருக்கிறார். அல்லேலூயா.

2. ஜெயத்தின் உள்ளுணர்வை தகர்க்கும் சில தடைகள்:-

ஜெயம் நமதே என்று ஜெயத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவதற்குப் பதிலாக, தோல்வியைப் பற்றியே எண்ணுவது இயற்கைக்கு முரணானது! நாம் தேவனுடைய எல்லா சிருஷ்டிகளிலும் தலைசிறந்த விசேஷ சிருஷ்டி என்பதை மறந்து விடக் கூடாது. கர்த்தர் நம்மை தமது சாயலிலே சிருஷ்டித்து எல்லா தடைகளையும் மேற்கொள்ள வல்லமையை அளித்திருக்கிறார். ஆகவே தேவ பிள்ளையே, ஜெயத்தைத் தடுக்கும் ஒவ்வொரு சத்துருவின் கிரியைகளையும் முறியடித்துப் போடுவாயாக!

இந்த அத்தியாயத்தில், நம் வாழ்க்கையில் தோல்வியைக் கொண்டு வரும் சில காரியங்களைக் குறித்து உங்களோடே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சாத்தான் நம் வாழ்க்கையிலே புகுந்து தோல்வியின் விதைகளை விதைத்து நம்மை அழிக்க முற்பட ஏதுவாயிருக்க காரணங்கள் என்ன என்பதை விளக்குகிறேன்.

அ. உன் நோக்கத்தையும், தரிசனத்தையும் நீ இழக்கும்போது:-

தரிசனமில்லாத வாழ்க்கை சாத்தானின் தாக்குதலுக்கு எளிதில் பலியாகும். நீதிமொழிகள் 29:18 சொல்கிறது, ''தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்.'' ஆம், வாழ்க்கையில் நோக்கமின்றி, குறிக்கோளின்றி, தரிசனமின்றி வாழ்வதே தோல்விக்கு அதி முக்கியக் காரணம்.

எந்த ஒரு தனிமனிதனோ குழுவோ, தேசமோ தொடர்ந்து ஒருவருக் கொருவர் சண்டையிட்டு, சபித்து

பட்சித்தால் அழிவது உறுதி. எவனொருவன், இன்று புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று நோக்கமில்லாமல் வாழ்கிறானோ அவன் முன்னேறப் போவதேயில்லை!

தேவபிள்ளையே, உன் எதிர்கால திட்டமென்ன? உன் ஏக்கமும், உன் தரிசனமும் என்ன? திட்டவட்டமான இலக்கோடு கூட, தெளிவான குறிக்கோளோடு கூட நீ மிக ஊக்கமான வாஞ்சையாய் முன்னேறுவாயானால் ஜெயம் உனதே!

ஆ. இது முடியாதென்று நீங்கள் மலைத்துவிடும்போது:-

''என்னால் முடியாது'', ''நான் சோர்ந்து போவேன்'' ''நான் ஒன்றுமில்லை" என்பது போன்ற எதிர்மறை தோல்வியின் எண்ணங்கள் உங்களை சிறிது சிறிதாக அழித்து விடக் கூடும். ''இயலாது, முடியாது'' என்கிற சிந்தனைகளை உங்கள் இருதயத்தில் விதைப்பது சாத்தான்தான். நீங்கள் தொடர்ந்து ''என்னால் எதுவும் முடியாது'' என்று சாத்தானின் அவிசுவாச வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கு பட்சத்தில், கர்த்தரால் கூட உங்களுக்கு உதவி செய்ய முடியாமற் போய்விடக் கூடும். தேவபிள்ளையே, உன் பிரச்சனை எவ்வளவு பெரியதாயிருந்தாலும் கூட, ''அதை நீக்க என்னால் முடியாது'' என்று மாத்திரம் நீ ஒருபோதும் கூறிவிடாதே என்று இயேசுவின் நாமத்தில் உன்னை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தோல்வியின் எண்ணங்கள் மனச்சோர்வைப் பெற்றெடுக்கின்றன! அதுவே வாழ்க்கையை நரகமாக்குகின்றது!

இ. தாழ்வு மனப்பான்மைக்கு நீங்கள் அடிமைப்படும்போது:-

நான் ஒரு கொடிய பாவியல்லவா! நான் படிப்பறிவில்லாதவனாயிருக்கிறேனே; எனக்கு நல்ல குடும்ப பின்னணி இல்லையே என்று நீ தொடர்ந்து அங்கலாய்த்துக் கொண்டே இருந்தால், அது உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். மட்டுமல்ல, இயற்கையாகவே தேவன் உங்களுக்குத் தந்த ஜெயத்தின் உள்ளுணர்வுகளையும் அழித்து விடும். கடைசியில் தோல்வியுற்றவர்களாக, ஒன்றையும் சாதிக்க முடியாதவர்களாகி விடுவீர்கள்.

காய்கறியை மிகவும் அதிகமாக வேக வைத்து விட்டால் என்ன நடக்கும் தெரியுமா? அதிலுள்ள சத்து போய் விடும். வைட்டமின் ''சி" அழிந்துவிடும். மட்டுமல்ல, அதன் சுவையும் நீங்கிவிடும். அப்படியே, உன் தாழ்வு மனப்பான்மை அதிகமாகி விட்டால் உனது மேன்மை, ஜெயஜீவியம் எல்லாம் நீங்கிப் போய் விடும்!

ஈ. சூழ்நிலைகள் உங்களை பயமுறுத்தும்போது:-

''சூழ்நிலைகளைக் கண்டு பயந்து நடவுங்கள்" என்று வேதம் ஒரு போதும் கூறுவதில்லை.

வேதம் என்ன சொல்கிறது, ''நீங்கள் பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி... பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்" என்றுதான் சொல்கிறது! அல்லேலூயா! வேதம் நம்மை எவ்வளவாய் உற்சாகப்படுத்துகிறது பார்த்தீர்களா?

ஒருமுறை, வேட்டையாடுதலைத் தன் தொழிலாகக் கொண்ட அமெரிக்கர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய தொழில் என்னவென்றால், ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள காடுகளுக்குச் சென்று அங்குள்ள பலவகையான காட்டு மிருகங்களை உயிரோடு பிடித்து அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்று அங்கு விற்பதுதான்.

அவர் சொன்னார், ''நீங்கள் காட்டு மிருகங்களுக்குப் பயப்பட்டால், அவை உங்களைத் துரத்திக் கொண்டு வரும். நீங்கள் அவைகளுக்குப் பயப்படாமல் தைரியமாய் நின்றால், அவைகள் ஒருபோதும் உங்களைப் பொருட்படுத்துவதில்லை. நீங்கள் தைரியமாய் காட்டின் நடுவிலே கூட படுத்து உறங்கலாம்''.

பயம், உங்களையறியாமலே உங்கள் சரீரத்திலிருந்து ஒரு வகை சப்த அலைகளை எழுப்புகிறது. அது காட்டு மிருகங்களை தூண்டி விட்டு உங்களைத் துரத்தும்படி ஏவுகிறது.

ஒரு உதாரணத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காடுகளில் வாழும் முயல்கள் எப்பொழுதும்

பயந்து கொண்டே வாழும். இந்த பயத்தினால் வரும் மின்சார அலைகளைப் போன்ற அலைகளை உணர்ந்து காட்டுப் பூனைகள் முயல் வளையைத் தேடி வந்து விடும். வந்ததும் தாய் முயல் ஒரே குதியாய் குதித்து தப்பி ஓட ஆரம்பிக்கும். காட்டுப்பூனை தாய் முயலைத் துரத்திப் பிடிக்கத்தான் முயற்சிக்குமே தவிர, ஒரு போதும் குட்டிகளைச் சேதப்படுத்தாது. காரணம், முயல் குட்டிகளுக்கு வெளி உலகம் தெரியாததால் அவை பயப்படுவதில்லை. அதினால் பகைவரை இழுக்கும் சக்தியும் அவைகளுக்கு இல்லை! தாய் முயலும் பயப்படாமல் அமைதியாய் தன் வளையில் படுத்திருந்தால் அதற்கு எந்த ஆபத்தும் இல்லாமல் இருந்திருக்கும்.

யோபு பக்தனின் வார்த்தைகளை நினைவு கூறுவோமாக. ''நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது'' (யோபு 3:25).

பயமானது வேதனையுள்ளது என்று வேதம் தெளிவாய் கூறுகிறது. வறுமைக்கு நீங்கள் பயந்தால், வறுமை உங்களைத் துரத்திக் கொண்டு வந்து உங்களை மேற்கொண்டு விடும். நீங்கள் வியாதிக்கு பயப்பட்டால், ஊரிலுள்ள அத்தனை நோய்களும் ஒன்று சேர்ந்து உங்களைத் துரத்தி, உங்கள் உடலையும் உள்ளத்தையும் சூரையாடிவிடும். நீங்கள் தோல்விக்கு பயந்தால் தோல்வி உங்களை மேற்கொள்ளும்.

தேவபிள்ளையே, பயத்துக்கோ, வியாதிக்கோ, தோல்விக்கோ ஒருபோதும் இடங்கொடாதே! இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் இவைகளின் மேல் அதிகாரமும் ஆளுகையும் செலுத்தி தோல்வியின் நினைவுகளை முறியடித்து விரட்டிவிடுங்கள்! உங்களை விடுதலையாக்கத்தானே அருமை ஆண்டவர் பூமிக்கு வந்தார்! ஜெயங்கொடுக்கிற தேவனால் ஜெயம் பெற்றுக் கொள்ளுங்கள்.

உ. குற்ற மனச்சாட்சி உங்களை வாதிக்கும் போது:-

ஒரு போதும் குற்றமனச் சாட்சியால் தவிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல

யாவங்களையும் நீக்கி உங்களைச் சுத்திகரிக்க வல்லமையுள்ளது ஆகவே நீங்கள் இனி, நான் ஒரு பாவி, சந்தோஷமாய் வாழ தகுதியற்றவன், ஜெய ஜீவியம் எனக்குக் கிடைக்காது என்றெல்லாம் புலம்ப வேண்டியதில்லை. இத்தகைய குற்ற மனச்சாட்சி உங்களை சோர்ந்து போகப்பண்ணி, முடிவில் தோல்வியைக் கொண்டு வந்து விடும்.

உவ. உங்கள் உள்ளத்தில் பகையும் கோபமும் குடி கொள்ளும் போது:-

கோபம் கண்களைக் குருடாக்கும், பகை உணர்ச்சி முன்னேற்றப் பாதையைத் தடுத்து விடும். தேவபிள்ளையே, நீ ஜெயங் கொண்டவனாய் விளங்க வேண்டுமானால் உனக்கு விசுவாசம், நம்பிக்கை, அன்பு மிகவும் தேவை. எளிதில் கோபம் கொள்ளுகிறவர்களும், மூர்க்க வெறியுள்ளவர்களும், மனதில் கசப்பை சுமந்து திரிகிறவர்களும் வெற்றி பெறுவது மிகக்கடினம்.

௩. தேவன் அளித்த ஜெய உணர்வை அனல் மூட்டி எழுப்புவது எப்படி?

அ. கர்த்தருடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்:-

முதலாவது இயேசுவை விசுவாசித்து கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். நாம் நம் இருதயத்தை கர்த்தருக்கென்று அர்ப்பணித்து இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது நாம் மறுபிறப்படைந்து புது சிருஷ்டியாகிறோம். நாம் தேவனோடு கூட ஒப்புரவாகுதலின் மூலம் தேவனுடைய கிருபையும் ஆசீர்வாதங்களும் நம் வாழ்க்கையில் அபரிமிதமாக ஊற்றப்படுகிறது.

ஆ! தேவன் நமக்காக தன் ஜீவனைக் கொடுத்து நம்மை பிதாவோடு ஒப்புரவாக்கினாரே. அவரே நம்மை செழுமையான புல்லுள்ள இடங்களில் நடத்த வல்லவர்.

ஆ. எப்பொழுதும் ஜெயத்தின் மனப்பான்மையோடிருங்கள்:-

நம் வாழ்க்கையில் ஜெயத்தைக் கொண்டு வரும் வல்லமைதான் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆதும்! வேதம்

சொல்கிறது. ''இப்பொழுது விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது'' (I கொரி. 13:13). ஆம், இவைகள் மூன்றும் தெய்வீக சுபாவங்கள். விசுவாசம் எங்குண்டோ அங்கே சூழ்நிலைகளை மேற்கொள்ளும் ஜெயமுண்டு. நம்பிக்கை எங்குண்டோ அங்கே முன்னேறிச் செல்லும் தைரியம் உண்டு. அன்பு எங்குண்டோ அங்கே மகிழ்ச்சியும், சந்தோஷமும் உண்டு.

இ. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள் :-

நம்முடைய வாழ்க்கையிலுள்ள சகல போராட்டங்கள், சோதனைகள், பயங்கள், அவிசுவாசங்கள் யாவையும் நீக்கிப் போடும்படி, நாம் தேவனை நோக்கி மன்றாடி ஜெபிக்க வேண்டும்! ஒவ்வொருநாளும் நாம் பற்களை துலக்குகிறோம்; குளிக்கிறோம்; பல முறைகள் முகத்தைக் கழுவுகிறோம் வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்கிறோம். அதே நேரத்தில் நம் ஆத்துமாவை சுத்தமாக, பரிசுத்தமாக வைத்திருக்கிறோமா? ஒவ்வொரு நாளும் நம் உள்ளத்தை இயேசுவின் இரத்தத்தால் கழுவத் தவறினால், பல பாவங்கள் நம்மில் தேங்கிவிடக் கூடும். அந்த பாவங்கள் ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதைத் தடுத்து நிறுத்திவிடும்.

எங்கே அசுத்தம் இருக்கிறதோ அங்கே ஈ மொய்ப்பதைப் போல, பாவ ஜீவியத்தை தோல்விகள் மொய்த்து விடும். அதைத் தொடர்ந்து நம் இருதயங்களில் நாசம் விளைவிக்கும் உணர்வுகளைச் சாத்தான் கொண்டு வருவான். அனுதின ஜெபநேரத்தில்தான் நமது இருதயங்களை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்தப்படுத்த முடியும்.

''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று கிறிஸ்து உங்களை அன்போடு அழைக்கிறார். உங்கள் இருதய பாரங்களை, கவலைகளை கிறிஸ்துவின் பாதத்தில் இறக்கிவையுங்கள். உங்கள் இருதயத்தை ஜெபத்தில் ஊற்றிவிடுங்கள். அப்பொழுது அருமை ஆண்டவரான இயேசு கிறிஸ்து அந்த பாரங்களையெல்லாம்

உங்களை விட்டு நீக்கி உங்களுக்குச் சமாதானத்தை அருளிச் செய்வார்.

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் (பிலி. 4:4). உங்கள் உள்ளங்கள் மகிழ்ச்சியினாலும், நம் பிக்கையினாலும் நிரம்பி வழியும்போது கிறிஸ்துவின் வல்லமை தீவிரமாய் உங்களில் கிரியை செய்யும். உங்கள் கையின் கிரியைகள் எல்லாவற்றிலும் உங்களுக்கு ஜெயம் கிடைப்பதை நீங்கள் காண்பீர்கள்.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் (பிலி. 4:6-7).

''நான் ஜெயம் பெறுவேன்'' ''வெற்றியாய் ஜீவிப்பேன்'' என்ற விசுவாசத்தின் உள்ளுணர்வு வேகமாய் நம்மில் கிரியை செய்ய வேண்டுமானால், நம் உள்ளம் எப்பொழுதும் சமாதானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். நம் இருதயம் நதியைப் போன்ற சமாதானத்தால் நிரம்பி வழிய வேண்டும். தேவ சமாதானத்துக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் ஒவ்வொரு வல்லமையையும் ஜெபத்தினால் முறியடிப்பாயாக!

ஈ. வேத வசனத்தை ஆழமாய்த் தியானியுங்கள்:-

வேத வசனங்களை ஆழ்ந்து படிப்பதின் மூலம் நாம் பெரிய காரியங்களை திட்டமிட முடியும்; நமது தரிசன எல்லை விரிவாகும்; நம் விசுவாசமும் ஊக்குவிக்கப்படும்!

நம் உடல் நலத்தைப் பேண, பலமுள்ளதாக்க நாம் உணவை உட்கொள்ளுவதைப் போலவே, உள்ளான மனுஷனை பெலப்படுத்த வேத வசனங்கள் பிரயோஜனப்படு

கின்றன. கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியானவர்களை வசனங்கள் வளர்ந்து செழிக்கச் செய்கின்றன!

மட்டுமல்ல, வேத வசனங்கள் பரலோக மன்னுவாய் இருக்கிறபடியினுல், ஆவிக்குரிய உலகத்தை நமக்கு விளக்கி வெளிப்படுத்திக் காண்பிக்கின்றன. வேதாகமத்தை ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தலாகமம் வரை தொடர்ந்து வாசிக்கும் பொழுது, மனித புத்திக்கு எட்டாத ஆவிக்குரிய தரிசனங்களை நாம் பெறுகிறோம். மட்டுமல்ல, கர்த்தரின் விசேஷ வல்லமையை, ஜெயத்தை நம் வாழ்வில் அனுபவிக்கிறோம். அல்லேலூயா!

''விசுவாசம் கேள்வியினுல் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினுலே வரும்''

நாம் வேத வசனத்தை ஒவ்வொரு நாளும் ஆவலோடு புசித்து உட்கொள்ளும்போது நம்மில் விசுவாசம், நம்பிக்கை, அன்பு பெருகுகிறது. நாம் அனுதினமும் பெலங்கொண்டவர்களாகி உலகத்தின் ஒவ்வொரு பிரச்சனையையும் சந்தித்து ஜெயங்கொள்ள வல்லவர்களாகிறோம். நாம் கையிட்டுச் செய்கிற ஒவ்வொரு திட்டங்களுக்கான தேவ ஆலோசனைகள் வேதத்திலிருந்து நமக்குக் கிடைப்பதால் நாம் வெற்றி சிறக்கிறோம். மேலும் பரிசுத்த ஆவியினுல் நாம் நிரம்பியிருக்கும்பொழுது, ஆவியானவர் நம்மைத் தாங்குவதால் நாம் எல்லாவற்றிலும் செழிப்படைந்தே ஆகவேண்டும்; வெற்றி சிறந்தே தீரவேண்டும்! அல்லேலூயா!

தம்முடைய பிள்ளைகள் தோல்வியடைவதை தேவன் ஒருபோதும் விரும்புவதே இல்லை; காரணம், அவர் ஒருபோதும் தோல்வியடைந்தவரல்ல! தோல்வியுள்ள ஆண்டவரை கற்பனை செய்து பார்க்க முடியுமா? கவலைப்பட்டு மனம் சோர்ந்து பயந்து போயிருக்கும் ஆண்டவரை சிந்தித்துப் பார்க்க முடியுமா? ஒருபோதும் முடியவே முடியாது!

நம் கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர். சர்வ வியாபகி. சர்வ ஞானமுள்ளவர்! அவர் எப்பொழுதும் ஜெயங் கொண்

டவர்! நம்மையும் எப்பொழுதும் வெற்றி சிறக்கப் பண்ணுகிறவர்! தோல்வியடையும்படி தேவன் எதையும் சிருஷ்டிக்கவில்லை.

மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவன். மனிதன் தோல்வியை தழுவவே பிறந்தவன் என்று எண்ணுகிறீர்களா? ஒருபோதும் இல்லை! அப்படி மனித வாழ்க்கையில் தோல்வி என்ற ஒன்று இருக்குமானால் அதற்குக் காரணம், அந்த ஆள் சாத்தானுக்கு இடங்கொடுத்திருக்கிறான் என்றுதான் அர்த்தம். அவன் கர்த்தரை விட்டு விலகி சாத்தான் விதைத்த தோல்வியின் எண்ணங்களை ஏற்றுக் கொண்டான் என்றுதான் பொருள். நாம் தோல்வி, பயம், கவலையின் எண்ணங்களுக்கு உள்ளத்தில் இடம் கொடுத்து, அதையே சிந்தித்து அதையே பேசும்போது தான், நம்மையறியாமல் நாம் சாத்தானிருக்கும் படுகுழிக்குள் குதித்து அவனோடு வாசம் பண்ணுகிறவர்களாகிறோம்.

மனிதன் தானாக தோல்வியடைவதில்லை! தோல்வியை அவன் தெரிந்து கொள்வதால்தான் அவன் தோல்வியடைகிறான்.

அதே நேரத்தில் அவன் தானாகவே இயற்கையாகவே ஜெயங்கொள்ளும்படி சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை மறந்துபோகக் கூடாது. அவனுக்கு ஜெயங் கொடுப்பதற்காகவே தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். "மனம் திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று அவர் பிரசங்கித்தார். தேவனுடைய பார்வையில் தோல்வி வாழ்க்கை இயற்கைக்கு மாறானது; அவரது சித்தத்திற்கு எதிரானது.

தேவபிள்ளைகளே, வேத வசனத்திற்கு செவிகொடுக்கும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் வெற்றியாய் வாழப் பிறந்தவர்கள் என்பதை விசுவாசியுங்கள்! ஜெயங் கொள்ளுதல் உங்கள் பிறப்புரிமை! இந்த வார்த்தைகளை சிந்தித்து மீண்டும் மீண்டும் விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள்.

நான் ஜெயங்கொள்ளப் பிறந்தவன்!

நான் ஜெய ஜீவியம் செய்கிறேன்!

வெற்றி எனது வாழ்க்கை!

நான் செழிப்படைந்து வாழ்ந்து சுகமாயிருப்பேன்!

பயப்படாதீர்கள்! பின்னேக்காதிருங்கள்! தேவனுடைய அளவற்ற ஐசுவரியத்தையும், செழுமையையும் விசுவாசித்து ஜெயத்தோடு முன்னேறிச் செல்லுங்கள்!

மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலம் உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

நான் கொரியா தேசத்திற்கு போதகர் பால் யாங்கி சோ அவர்களின் ஆலயத்திற்குச் சென்றிருந்த போது, அவர் தமது புத்தகங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும்படி அனுமதி வழங்கினார்! கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

இந்த புத்தகத்தை வெளியிடும் செலவை சேலத்திலுள்ள ஒரு அருமையான போதகர் அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். சேலம் பகுதியில் எனது புத்தகங்களை மிக அதிகமாய் வினியோகம் செய்கிற அவர், மிகவும் அன்போடு என் அலுவலகத்திற்கு வந்து, உதவி செய்ததால் இந்த புத்தகம் உங்கள் கைகளில் தவழுகிறது.

Rev. Raja D. Stephens, Salem.

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும், இந்த அருமைக் குடும்பத்தினரைச் சேருவதாக!

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச்செய்யும்! அல்லேலூயா!

எமது புதிய வெளியீடுகளை வாசித்தீர்களா?

எம்மிடம் கிடைக்கும் மிக அருமையான ஆவிக்குரிய நூல்களை வாசித்தீர்களா?

	புத்தகங்களின் பெயர்	ரூ	பை
1.	கல்வாரிப் பாதையில் நீ...!	5	00
2.	என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே!	5	00
3.	கிறிஸ்துவின் இரத்தம்!	5	00
4.	ஆயத்தப்படு... ஆயத்தப்படுத்து!	5	00
5.	அன்பின் தேவனின் ஆறுதல்!	5	00
6.	எங்கள் போர் ஆயுதங்கள்!	5	00
7.	பலியின் உடன்படிக்கை!	5	00
8.	எழுப்புதல் எப்பொழுது?	5	00
9.	ஊழியனே, உனக்கு (மொழி பெயர்ப்பு)	3	00
10.	துதியின் வல்லமை	5	00
11.	என்னை ஆசீர்வதியும் ஆண்டவரே	5	00
12.	வல்லமையான 60 சிறு கதைகள்	5	00
13.	ஆறுதலான 60 தியானங்கள்	5	00
14.	கல்வாரியின் பெருந்துளிகள்...	5	00
15.	ஆத்தும நேசரின் ஏழு வார்த்தைகள்	5	00
16.	அனுதினமும் என் இயேசுவோடே—!	5	00
17.	தீப்பொறி அனுபவங்கள்!	5	00
18.	ஏனோக்கு	5	00
19.	சுவைமிக்க 60 சிறுகதைகள்	5	00
20.	சுகமளிப்பவர் இயேசு	5	00
21.	அந்த நட்சத்திரம்!	5	00
22.	அக்கினி இரதங்கள்	5	00
23.	பெற்றுக் கொள்ளத்தக்கதாக...!	5	00
24.	சிறுகதைகளும் பிர. குறிப்புகளும் பாகம் I	5	00
25.	சிறுகதைகளும் பிர. குறிப்புகளும் பாகம் II	5	00
26.	அக்கினி அனுபவங்கள்	5	00
27.	தாழ்ச்சி அடையேன்	5	00
28.	மன்னன் இயேசுவுக்கு ஓர் சாட்சி!	5	00
29.	ஏறி வா	5	00

30.	ஏழு பண்டிகைகள்!	5	00
31.	ஜெயிப்போமா?	5	00
32.	உபவாசத்தின் வலிமை!	5	00
33.	தேன் சுவைக் கதைகள்	5	00
34.	அபிஷேகியும் ஆண்டவரே!	5	00
35.	மகிமையான கிறிஸ்துவின் வருகை	5	00
36.	என் நேசரே தீவிரியும்!	5	00
37.	தேவ சித்தத்தை அறிந்து கொள்வது எப்படி?	5	00
38.	எங்கே? எங்கே? எங்கே?	5	00
39.	இரவு கோல்!	5	00
40.	சிறு சிறு செய்திகள்	5	00
41.	நிமிடச் செய்திகள்	5	00
42.	நீண்ட நேரம் ஜெபத்தில்...!	5	00
43.	ஜெபமும் எழுப்புதலும்	5	00
44.	தடைகளைத் தகர்ப்பவர்	5	00
45.	வஞ்சக சாத்தான்	5	00
46.	உன்னைச் சந்திக்கும் காலம்	5	00
47.	உன்னதத்தில், உயர் ஸ்தலத்தில்	5	00
48.	THE FOURTH DIMENSION (Paul Yonggi Cho)	30	00
49.	ஜெய ஜீவியம் (பால் யாங்கி சோ)	15	00
50.	BORN TO SUCCEED ஜெயம் நமதே (பால் யாங்கி சோ)	5	00
51.	கிறிஸ்து பெரியவர்	5	00
52.	தெளிதேன் துளிகள் பாகம் I	15	00
53.	தெளிதேன் துளிகள் பாகம் II	15	00
54.	நடிகர் வாழ்வில்	5	00
55.	அன்றன்றுள்ள அப்பம் (ஆண்டு சந்தா)	20	00

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

J. சாம் ஜெபத்துரை

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை 600 024.

போதகர்
பால் யாங்கி சோ

உலகத்திலேயே மிகப் பெரிய கிறிஸ்தவ ஆலயம் எங்கிருக்கிறது என்று கேட்டால், அது கொரியாவில் சீயோல் என்ற பட்டணத்தில்தான் இருக்கிறது என்று பதில் சொல்வேன். அங்குள்ள பூரண சுவிசேஷ மத்திய சபையின் தலைமைப் போதகராக பால் யாங்கி சோ அவர்கள் ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது அந்த சபையின் அங்கத்தினர் எண்ணிக்கை ஐந்தரை லட்சமாகும். மாதம்தோறும் பத்தாயிரம் புதிய அங்கத்தினர்கள் இந்த சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

எழுப்புதல் தீ பரவும் இந்த ஆலயம் உலகிலுள்ள எல்லா விசுவாசிகள், போதகர்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது! அவர்கள் இந்த போதகரின் சபைக்குப் பறந்து சென்று எழுப்புதலின் அக்கினி அலைகளால் நிரப்பப்பட்டு திரும்புகிறார்கள்.

இந்த புத்தகத்தில் அவர் எழுப்புதலின் ரகசியங்களையும், ஜெய ஜீவியத்தின் இரகசியங்கள் பற்றியும் மனம் விட்டு பேசுகிறார். இந்த புத்தகத்தின் செய்திகள் மகத்தான மாறுதல்களை உங்கள் வாழ்க்கையில் உண்டு பண்ணக் கூடியது.! எழுப்புதலடையுங்கள்! உங்கள் எழுப்புதல் அக்கினி தேசமெல்லாம் பரவட்டும்!

இது ஒரு சாம் ஜெபத்துரை வெளியீடு